

திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆலோசனையின்படி உடுமலை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ச.கே.மாரிமுத்து ஏற்பாட்டில் அ.தி.மு.க., பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்றிய, கிளை நிர்வாகிகள் 170 க்கும் மேற்பட்டோர் கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி சிவா மண்டல பொறுப்பாளர், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட ஒன்றிய கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் தலைமையில்நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் நினைவஞ்சலி ஊர்வலம் சாஸ்திரி சாலையில் உள்ள கோஹினூர் தியேட்டர் அருகில புறப்பட்டு அண்ணா நகர் உழவர் சந்தை அருகே இருக்கும் தியாகிகளின் நினைவு சின்னம் வரை சென்றது ஊர்வலத்தில் தலைமை தாங்கி பங்கேற்ற அமைச்சர் கே.என்.நேரு, முன்னிலை வகித்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தியாகிகளின் நினைவிடத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்கள் அருகில் அருண் நேரு எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் தியாகராஜன், ஸ்டாலின் குமார், சௌந்தரபாண்டியன், பழனியாண்டி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பில் பெரியசாமி கே என் சேகரன், கிழக்கு மாநகர செயலாளர் மதிவாணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

### 4,000 –ஆவது குடமுழுக்கு! சென்னை, பெரம்பூர்

# சேமாத்தம்மன் திருக்கோயிலில் நாளை நடைபெறுகிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜன.27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பறை சாற்றும் காலப் பெட்டகங்களான திருக்கோயில்களைப் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், 4,000 வது குடமுழுக்காக சென்னை, பெரம்பூர், சேமாத்தம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நாளை (28.01.2026) வெகு சிறப்பாக நடைபெற உள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள், திருத்தேர்கள் மற்றும் நந்தவனங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆகம விதிப்படி குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களை கண்டறிந்து திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தும் பணிகளை முன் எப்போதும் இல்லாத அளவில் இந்து சமய அறநிலையத்துறை முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக 400 ஆண்டுகளுக்கு பிறகு கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலுக்கும், 300 ஆண்டுகளுக்கு பிறகு, காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கும், 150 ஆண்டுகளுக்கு பிறகு இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம், கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கும், 123 ஆண்டுகளுக்கு பிறகு திருநெல்வேலி மாவட்டம், அரிகேசவநல்லூர், பெரியநாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயிலும், 110 ஆண்டுகளுக்கு பிறகு வேலூர் மாவட்டம், வெட்டுவானம், திரௌபதி யம்மன் திருக்கோயிலுக்கும், 100 ஆண்டுகளுக்கு பிறகு 22 திருக்கோயில்களுக்கும், 80 ஆண்டுகளுக்கு பிறகு 10 திருக்கோயில்களுக்கும், 70 ஆண்டுகளுக்கு பிறகு 14 திருக்கோயில்களுக்கும், 60 ஆண்டுகளுக்கு பிறகு 21 திருக்கோயில்களுக்கும், 50 ஆண்டுகளுக்கு பிறகு 48 திருக்கோயில்களுக்கும், திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன.

1,000 ஆண்டுகள் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் ரூ.425 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள். அரசு மானியம், பொதுநல நிதி, திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் நிதி என மொத்தம் ரூ.560 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 77 திருக்கோயில்களில் குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளன. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் கிராமப்புற திருக்கோயில்களுக்கான திருப்பணி நிதியுதவி ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டு, இதுவரை 10,000 திருக்கோயில்களுக்கு ரூ.212.50 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான வல்லுநர் குழுவால் 14,979 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், 1,000வது குடமுழுக்கு சென்னை, மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் திருக்கோயிலிலும், 2,000 வது குடமுழுக்கு மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வீரட்டேஸ்வரர் திருக்கோயிலிலும், 3,000 வது குடமுழுக்கு நாகப்பட்டினம் மாவட்டம், திருப்புகலூர் அக்னீஸ்வரர்சுவாமி திருக்கோயிலிலும் இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டன.

திராவிட மாடல் அரசின் மணிமகுடமாய், இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றுச் சாதனையாக, 4,000வது குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா சென்னை, பெரம்பூர் அருள்மிகு சேமாத்தம்மன் திருக்கோயிலில், வருகின்ற ஜனவரி 28 அன்று அன்னைத் தமிழில் வேத மந்திரங்கள் முழங்க சிறப்பாக நடைபெற உள்ளது.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், தவத்திரு ஆதீனப் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், சமய ஆன்றோர்கள், சான்றோர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### தண்டையார்பேட்டை – அரசு புறநகர் மருத்துவமனையில்–ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள – மகப்பேறு –

# பச்சிளம் குழந்தைகள் மையக் கட்டிடம் - எப்போது பயன்பாட்டிற்கு வரும்?

## சட்டப்பேரவையில் – ஜெ.ஜெ. எபினேசர் கேள்வி!

சென்னை, ஜன.27-

சட்டப்பேரவையில் - ஜன.23 அன்று கேள்வி நேரத்தின் போது, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி கழக உறுப்பினர் ஜெ.ஜெ. எபினேசர், "தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் - ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் மையக் கட்டிடம் எப்போது பயன்பாட்டிற்கு வரும்?" என்று கேள்வி எழுப்பினார்.

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**ஜே.ஜே. எபினேசர்** : என்னுடைய ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 42ல் கைலாசம் தெருவில் அமைந்துள்ள தண்டையார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில், அந்த வளாகத்திற்குள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் மையத்திற்கான கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது எப்போது மக்கள் பயன்பாட்டிற்கு வரும்?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** தண்டையார்பேட்டையில் கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடமும், கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையில் கட்டப்பட்டிருக்கிற கட்டடமும், இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டிருக்கிற ஒரு நரம்பியல் கட்டடம் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் மிக விரைவில் மாண்புகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கின்றன என்று தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன், உங்கள் (பேரவைத் தலைவர்) கட்டடமும் கூட.

நீங்கள் கோரிய கட்டடத்திற்கு HR நியமிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வள்ளியூரில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை விரைவில் பயன்பாட்டிற்கு வருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### கடலூர் மாவட்ட மீனவ கிராமங்களின் உள்கட்டமைப்பிற்கு

# பல கோடி ரூபாய்க்கு திட்டங்கள் தந்த 'திராவிட மாடல்' அரசு!

## கழக மீனவர் அணி செயலாளர், மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் பேச்சு!

கடலூர். ஜன. 27–

கடலூர் மாவட்டம், முடசலோடை, பரங்கிபேட்டை, புதுக்குப்பம், கடலூர் ஆகிய நான்கு பகுதிகளில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம்கள் நடைபெற்றது. இந்த முகாம்களின் வழியே 1030 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.




இந்த முகாம்களில் கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் பேசுகையில், "கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களின், பொற்கால திராவிட மாடல் நல்லாட்சியில் கடலூர் மாவட்ட மீனவர்களுக்கு ஏராளமான திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீன்பிடித்தொழில் சார்ந்த ஒருவர் கூட விடுபட்டுவிடக்கூடாது என அறிவுறுத்தி உள்ளார். அதனால் தான் தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்களை நடத்தி உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்தியுள்ளோம்.

கழக ஆட்சியில், முதல்வர் அவர்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 5000 ரூபாயில் இருந்து 8000 ரூபாயாக உயர்த்தினார்கள். அதில் கடலூர் மாவட்டத்தில் மட்டும் 60222 பயனாளிகளுக்கு, 3718.29 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் கடந்த 5 ஆண்டு கால கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் 63043 பயனாளிகளுக்கு, மீன்பிடி குறைவுகால நிவாரணத் தொகையாக 3782.59 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே போல் கழக ஆட்சியில் கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 73348 பயனாளிகளுக்கு, 3296.71 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் 71170 பயனாளிகளுக்கு, 3200.59 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கழகத் தலைவரின் ஆட்சியில், கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் தின உதவித் தொகையானது 250 ரூபாயில் இருந்து, 350 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மீனவர்களின் நலன் நாடும் அரசாக நம் திராவிட மாடல் அரசு உள்ளது. அந்தவகையில் கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் படகுகளுக்கு வழங்கப்படும் மானிய விலை எரியெண்ணையின் அளவினை விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டரில் இருந்து, 19 ஆயிரம் லிட்டராகவும், நாட்டுப் படகிற்கு ஆண்டு ஒன்றிற்கு 4000 லிட்டரில் இருந்து, 4400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கினார். இதில் கடலூர் மாவட்டத்தில்190விசைப்படகுகளும், 894 நாட்டுப்படகு மீனவர்களும் பயன்பெற்று வருகின்றனர்.

கடலூர் மாவட்ட மீனவ கிராமங்களிலும் ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள தாழங்குடா மீன்பிடி துறைமுகத்தில் 13 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைத்தது கழக அரசு. முதுநகர் மீன்பிடித்துறைமுகத்தை புதுப்பிக்கும் பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சி.புதுப்பேட்டை மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பரங்கிப்பேட்டை அன்னன்கோவில் மற்றும் முடசலோடை மீனவ கிராம மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகள் அமைக்கும் பணி 19 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல், சுனாமிநகர், அக்கரைகோரி மீனவ கிராமங்களில்

இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள், பாரம்பர்ய மீனவர் சங்கத் தலைவர் எஸ்.ஏ.மகேஷ் உள்ளிட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், மீன்வளத் துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அயப்பாக்கத்தில் அன்னை தமிழை காத்திட தன்னுயிரை ஈர்த்த கொள்கை மறவர்களின் வீரத்தை போற்றிடும் விதமாக மொழிப்போர் தியாகிகளான நடராசன், தாளமுத்து, சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன், முத்து ராஜேந்திரன், முத்து, வீரப்பன், சண்முகம், தண்டபாணி, சாரங்கபாணி ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் இரா.வினோத், செண்பகவள்ளி, பாபு, சேகர், செல்லதுரை, ஸ்ரீதர், வெங்கடேசன், ஷர்மிளா, தேவி பிரியா, தேன்மொழி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மூத்த முன்னோடிகள் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

### மாதவரம் எஸ்,சுதர்சனம் எம்,எல்,ஏ, - கலாநிதி வீராசாமி எம்,பி, கே,பி,சங்கர் எம்,எல்,ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்!

மாதவரம், ஜன.27-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 19வது வட்டம் மாத்தூர் எம் எம் டி ஏ முதல் பிரதான சாலை அருகே நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் 27 /1/ 2026 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்திற்கு 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச் செல்வன் வரவேற்கிறார். வட்ட செயலாளர்கள் கே. அங்குசாமி, இ.கண்ணப்பன், கே. கருணாகரன், பி .எஸ். சந்துரு, வி ஆர். குப்பன் ஆகியோர் கூட்டத் தலைவரை முன்மொழிந்து வழிமொழிந்து பேசுகிறார்கள்.

பகுதி கழக நிர்வாகிகள் வி. திராவிட வீரன், கே. சிவசங்கரன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர்.முரளி, பி.தரணி, க.காசிநாதன்,பி. நிர்மல் குமார், கே. செல்வன், நா.மோகன் குமார் நாகூரார், வி. கார்த்திகேயன், பா . சந்திரன், கே.ராஜா, நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி 2ஆம் மாதமாக மாதந்தோறும் 27ஆம் தேதி 200 மூத்த முன்னோடிகளுக்கு அரிசி மற்றும் மளிகை சாமான்களை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ, மருத்துவர் கலாநிதி வீராசாமி எம் பி, கே.பி. சங்கர் எம்எல்ஏ ஆகியோர் கலந்துகொண்டு வழங்குகிறார்கள்.

மாதவரம் தொகுதி பார்வையாளர் ஜெ.அருண், திருவெற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன்,மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மிசா. மதிவாணன், வி. இராமநாதன், வி. கண்ணதாசன், வீ. கவி கணேசன்,ஜி. சந்திரபோஸ், ஆர்.பத்மநாபன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிரு ஷ்ணன், பா அறிவழகி பாலகிருஷ்ணன், எம். ஆனந்தன், தி.மு தனியரசு, ஜி. துக்காராம், ஏ. வி. ஆறுமுகம், எஸ். நந்தகோபால்,வை ம.அருள்தாசன், மி. வே. கருணாகரன், ஜி. தயாளன், சி.அற்புதராஜ், ஜி. ராஜேந்திரன், ஜெ. ஜெய மதன்,இரா. முருகேசன்,என். பரந்தாமன், டி ஏ. ராஜு, பி .சாந்தி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.டி. மதன்குமார், வி. தியாகராஜன், ஜி. சன் முனியாண்டி, எம். எம். செந்தில், எஸ். ஏ .சீனிவாசன், கு .தமிழ்மணி ,ஏ. சுந்தர்ராஜ், ஜே அப்துல் ஹாசன், டாக்டர் து. கோபால், ஜே .தேவனேசன்,எம். கோமலவல்லி, அம்மமூர்த்தி,ஆர். டி. குமார், பி. வெங்கடேசன்,கே. ரவிக்குமார்,ரா. மோகனசுந்தரம், ரா. உத்திராஜ், கே . லட்சுமி காந்தன், பா. மதிவாணன், சி. ஏழுமலை, சி. கோவிந்தராஜ், கே. தேசிங்கு,க. காசிநாதன்

மாவட்டத் துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், மோரை சதிஷ்குமார், டி. ஜி. ஆர். மணிவண்ணன், கேபிள் த. வே கணேசன், ஜிகே. இனியன், சின்ன மாத்தூர் மணிகண்டன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, பி.ஜெயராஜ், டி. வினோத், ஜி. ராஜ்குமார்,எஸ். உதயகுமார் ,கே சண்முகப்ரியன்,எஸ். கோபால கிருஷ்ணன், எஸ். சிவக்குமார், பா. கோபிநாத், வீ. மணிகண்டன்,துரை தசரதன் ,சா. முகமது வசீம், கே. ஏழுமலை, எஸ். கருணாகரன்,கா. சரவணன், டி. ஜெய்சங்கர்,என். சந்திரன், தி. வெங்கடேசன், பி. குணசேகரன்,எம் அமுதா, எஸ். கலைச்செல்வி, ஆர். சுதா, எஸ். சுதா,ஜெ. யுவராணி, எஸ். பார்த்தசாரதி, எஸ். ஆர். சேகர் ராஜன், பி. அருண்ராஜ், இ. எம். மனோகரன்

15 வது வட்ட நிர்வாகிகள் ராஜேந்திரன், பி.டி. ரவிச்சந்திரன், கண்ணன், மனோகரன், கே. செல்வன், எல்ல முத்து, டி. எஸ். ஜனார்த்தன், பாஸ்கர், பதினாறாவது வட்ட நிர்வாகிகள் இ. அருள்,வக்கீல் இ. வெங்கடேசன், பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார்,இ. குமரவேல்,கே.ஏ. ரமேஷ்,சி. முத்தையா, ராஜ்மோகன், மாரி, உத்துராஜ்,17வது வட்ட நிர்வாகிகள் ஏ. கோவிந்தராஜ், டி. ஸ்டாலின்,எஸ். பாலாஜி, பி. லதா, வி. பார்த்தசாரதி,எஸ். சுகேந்திரன், என். குமார் ,சி. மூர்த்தி, கே. ராஜா, 19வது வட்ட நிர்வாகிகள் ஜி. சரவணன், ஏ. திருமலை, என். ரகுவரன், துளசி, கே. சங்கர், து. கோவர்த்தனன், வே. கன்னியப்பராஜ், சையத் அப்சல், வி. ஹரி சுப்பிரமணி, ஏ. கதிரவன், 23வது வட்ட நிர்வாகிகள் து. எழில் குமார், மு. விக்னேஸ்வரன், டி. ராஜாராம், மேக்ஸிலா உதயகுமார், சொ. சரவணன், டி. நெல்சன் ராஜ்,க. சிவகுமார்,க. ந. க. சைமன்,வே.ரவி, எஸ். முத்துவேல், 23 அ வட்ட நிர்வாகிகள் அ.ராமச்சந்திரன், எம். உசேன் மைதீன், பி. சுதாகர், அம்மு மூர்த்தி, அறிவழகன், பெ.முத்துகிருஷ்ணன், அ.அப்துல்சமது, வி.ஹரி, டி . பார்பன், வி.பார்த்திபன்

பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் எஸ். சுகாசினி, டி. அமலா, ராஜேஸ்வரி, என். கவிதா நாராயணன், ஆர்.ஜெயபாரதி, அத்திக்குளம் தேவி, ஆர். சரஸ்வதி, மகாலட்சுமி, பகுதி மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் அபிதா முகமது அலி, ஜி. வயலட்ராணி, சகிலா, சாந்தி, பெரியநாயகி, பார்கவி, கஸ்தூரி, சரஸ்வதி, பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ர. விஜய்ஆனந்த், எம். என்.அஜய் தென்னவன், வெ. சிவப்பிரகாஷ், ஆ. விஜயன், க. யுவராஜ், கோ. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், அ. சாந்தகுமார், மாணவரணி த. விக்னேஸ்வரன், ஆதிதிராவிட நலக்குழு தகுதி நிர்வாகிகள் எஸ். நாகராஜன், கே. விஜயகுமார், எஸ். புஷ்பராஜ், எம். சுரேஷ், எம்.மதியழகன், ஆர். சரவணன், பகுதி தகவல் தொழில்நுட்ப அணி விஸ்வநாதன், வினோத்குமார், நாகலட்சுமி, வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஏ.தசரதன், பபின், எம். என்.தளபதி,சாய் சந்திப், டி.தங்கவேல், மனோ பிரியதர்ஷன், மணலி புதுநகர் சி எம் ராஜா உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள்.

இறுதியாக கவுன்சிலர் க. காசிநாதன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர். பாபு நன்றி கூறுகிறார்கள்

நிகழ்ச்சி காண ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்து வருகிறார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 15வது வட்டம், பொன்னேரி தொகுதி,பழையநாபாளையத்தில் திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் 150 தாய்மார்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டன. வட்டச் செயலாளர் கே.அங்குசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழகத்தினர் இளைஞர் அணியினர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.